# தினசரி நடப்பு நிகழ்வுகள் - 13.08.2018

## தமிழக நிகழ்வுகள்

- தமிழ்நாடு உடற்கல்வியியல் மற்றும் விளையாட்டு பல்கலைக்கழகத்தின் முதல் பெண் துணை வேந்தராக **ஷீலா ஸ்டீபன்** என்பவரை தமிழக ஆளுநர் பன்வாரிலால் புரோகித் நியமித்துள்ளார்.

## இந்திய நிகழ்வுகள்

- தேசிய மனித உரிமை ஆணையத்தின் குறும்பட விருது திட்டம் - 2018-ன் (Short Film Award) கீழ் சிம்லாவைச் சேர்ந்த தேவ்கன்யா லோக்தெத்தா – என்பவரின் திரைப்படம் "Behind The Bars" முதல் பரிசை வென்றுள்ளது.

- தேசிய மனித உரிமைகள் ஆணையம்:
  - 12 அக்டோபர் 1993 ஆம் ஆண்டு தேசிய மனித உரிமைகள் ஆணையம் அமைக்கப்பட்டது.
  - இதன் தலைநகரமாக டெல்லி உள்ளது.
  - இதன் தற்போதைய தலைவர் - H.L. தத்து

- நிலவினை பற்றிய ஆய்விற்காக இந்தியாவால் அனுப்பப்படும் **சந்திராயன் - 2** விண்கலம் 2019-ஆம் ஆண்டு ஜனவரி – 3 ஆம் தேதி விண்ணில் செலுத்த உள்ளதாக இஸ்ரோ தலைவர் சிவன் தெரிவித்துள்ளார்.

- மேலும் PSLV C – 42 என்ற ராக்கெட் மூலம் பிரிட்டனின் இரண்டு வர்த்தக செயற்கோளை செப்டம்பர் - 2018 ல் அனுப்ப இஸ்ரோ திட்டமிட்டுள்ளது.

## உலக நிகழ்வுகள்

- நேபாளத்தின் தலைநகர் காத்மண்டு நகரில், “பன்னாட்டு தகவல் தொடர்பு ஒருங்கிணைப்பு திட்டம் (MCIP) என்ற தலைப்பில், ஆசிய – பசுபிக் பிராந்திய நாடுகளுக்கான பசுபிக் எண்டெவர் - 2018 தொடர்பு பயிற்சி (Pacific Endeavor – 2018) நடைபெற்றுள்ளது. [MCIP – Multinational Communications Interoperability Program]
  - ஆசிய – பசுபிக் பிராந்தியத்தின் இராணுவப் படைகள் இடையே பேரழிவு தொடர்பான ஒருங்கிணைப்புகளை மேற்கொள்வதற்காக, பொதுவான தகவல் தொடர்பு செயல்முறைகளை உருவாக்குவது என்பதை நோக்கமாகக் கொண்டு இப்பயிற்சி நடைபெற்றுள்ளது.

## விளையாட்டு செய்திகள்

- கனடாவில் நடைபெற்ற **ரோஜர்ஸ் கோப்பை** டென்னிஸ் போட்டியில் ஆண்கள் ஒற்றையர் பிரிவில் **‘நம்பர் ஒன்’ ரபெல் நடால்** (ஸ்பெயின்), ரஷ்யாவின் கரென் காச்சனோவை வென்று சாம்பியன் பட்டம் வென்றார்.
  - இது இந்த ஆண்டின் இவர் பெறும் 5-வது சாம்பியன் பட்டமாகும்.

- **வியட்நாம் ஓபன்** பாட்மிண்டன் போட்டியில் ஆண்களுக்கான ஒற்றையர் பிரிவில் இந்தியாவின் **அஜய் ஜெயராம்** வெள்ளிப் பதக்கம் வென்றுள்ளார்.
  - இந்தோனியாவின் ஷேசர் ஹிரன் ரஷ்டவிடோ தங்கப் பதக்கம் வென்றுள்ளார்.

## முக்கிய தினங்கள்

- சர்வதேச இளைஞர் தினம் - ஆகஸ்டு 12
  - சர்வதேச இளைஞர் தினம் (International Youth Day) ஆகஸ்ட்


We Shine Academy™

12 அன்று ஐக்கிய நாடுகள் அவையால் கடைபிடிக்கப்படுகிறது.
- 2018 சர்வதேச இளைஞர் தின கருப்பொருள் (Theame):
- "இளைஞர்களுக்கான பாதுகாப்பு வெளிகள்" (Safe Spaces of Youth)

- உலக யானைகள் தினம் - ஆகஸ்ட் 12
  - அழிந்து வரும் யானை இனத்தை காப்பாற்றுவதற்காகவும், இதற்காக சமூகத்தில் விழிப்புணர்வு ஏற்படுத்துவதற்காகவும் ஆண்டு தோறும் ஆகஸ்ட் 12 அன்று உலக யானைகள் தினம் கடைபிடிக்கப்படுகிறது. (August 12 – World Elephant Day)

- சர்வதேச உள்நாட்டு மொழிகள் ஆண்டு – 2019 (2019 – International Year of Indigenous Languages)
  - உள்நாட்டு மொழிகளின் குறித்த விழிப்புணர்வுக்காக, ஐக்கிய நாடுகளின் பொதுச் சபை, 2019-ஆம் ஆண்டினை, "சர்வதேச உள்நாட்டு மொழிகள் ஆண்டாக" (International Year of Indigenous Languages – 2019) கடைபிடிக்க முடிவு செய்துள்ளது.

**புத்தகங்கள்**

- இலக்கியத்துக்கான நோபல் பரிசு பெற்ற இந்திய வம்சாவளி எழுத்தாளர் நைபால்( **V.S Naipal**) இலண்டனில் காலமானார்.
- இவர் எழுதிய பிரபலமான புத்தகங்கள்:
- 1971-ஆம் ஆண்டு இன் ஏ ப்ரீ ஸ்டேட் **(In a Free State)** என்ற புத்தகத்துக்காக மேன் புக்கர் விருது வழங்கப்பட்டது.
- 2001- ஆம் ஆண்டு இலக்கியத்துக்கான நோபல் பரிசு கிடைத்தது.
- இந்தியாவைக் குறித்து **An Area of darkness, A wounded** Civilization போன்ற புத்தகங்களை நைபால் எழுதியுள்ளார்.

- **'Devil's Advocate : The Untold Story**" என்ற புத்தகத்தை சமீபத்தில் "கரண் தாப்பர்" என்பவர் எழுதியுள்ளார்.


We Shine Academy ™